**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. எம். சண்முககனி, பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, மானாமதுரை
2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண்.1/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.178/2022**

ரவிசந்திரன் ...மனுதார்/பிரதிவாதி

..எதிர்..

மகாதேவி
.....எதிர்மனுதார்/வாதி

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 12.03.2026–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்திரு.M.லிங்கேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, மானாமதுரை வட்டம், திருப்பாச்சேத்தி அஞ்சல், மழவராயனேந்தல் கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியரை மனுதாரர் தரப்பு 2 வது சாட்சியாக விசாரணை செய்ய மேற்படியாருக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்ப அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் இந்த மனுதாரரும் பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அசல் வழக்கு பிரதிவாதி தரப்பு தொடர்சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும் வாதி மகாதேவி திருப்பாச்சேத்தி அஞ்சல், மழவராயனேந்தல் கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியருக்கு 04.11.2022ம் தேதி மனு அனுப்பியுள்ளார் என்றும் அதன்படி மேற்படி தலைமை ஆசிரியரை இந்த மனுதாரர் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி உள்ளது என்றும் மேற்படி சாட்சியம் இந்த மனுதாரர் தரப்பு எதிர்வாதத்திற்கு மிக முக்கியமான சாட்சி என்றும் எனவே மேற்படி தலைமை ஆசிரியரை அசல் வழக்கில் சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

3) **எதிருரையின் சுருக்கம்:**

இந்த எதிர்மனுதாரர் 04.11.2022ல் மழவராயனேந்தல் கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியருக்கு மனு கொடுத்ததாக இந்த மனுவில் கூறியுள்ளது ஒப்புக் கொள்ளப்படுகிறது என்றும் மற்ற விபரங்கள் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் மேற்படி மனு இந்த மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதை மறைத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் என்ன காரணத்திற்காக மழவராயனேந்தல் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியரை சாட்சியாக விசாரணை செய்ய வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இந்த எதிர்மனுதாரர் மழவராயனேந்தல் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியரிடம் 04.11.2022 ல் மனு கொடுத்துள்ளார் என்றும் அதனால் மேற்படி தலைமை ஆசிரியரை அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி 04.11.2022 தேதியில் இந்த எதிர்மனுதாரர் மழவராயனேந்தல் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியரிடம் கொடுத்த மனு அசல் வழக்கில் ஏற்கனவே இந்த மனுதாரரால் பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது மேற்படி 04.11.2022 தேதிய மனு இந்த மனுதாரர் தரப்பில் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இந்த மனுதாரர் தரப்பில் என்ன காரணத்திற்காக மேற்படி தலைமை ஆசிரியரை அசல் வழக்கில் சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்பதை பொறுத்து ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் எதுவும் மனுவில் சொல்லப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் இந்த மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின்

என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.04.10 14:17:00 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.04.10 14:17:07 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை